**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சத்தியமங்கலம், ஈரோடு மாவட்டம்.**
**அசல் வழக்கு எண்.93/2013**

பெயர்–திரு.சின்ராஜ் நாள்.01.04.2026

பி.வா.சா.3 ஆஜர். சத்திய பிரமாணத்தின் பேரில் விசாரணை செய்யப்பட்டார்.

**பி.வா.சா.3 : வாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி**

எனக்கு 1–ம் பிரதிவாதி தங்கராஜ் சகோதரர் என்றால், சரிதான். எனது சித்தப்பா மகன் ஆவார். எனக்கும், 1–ம் பிரதிவாதிக்கும் நல்ல சுமூகமான உறவு உள்ளது என்றால், சரிதான். இதுநாள்வரையில் வாதியிடம் பணம் கொடுக்கல், வாங்கல் உள்ளதா என்றால், இல்லை. நான் வாதியிடம் பணம் கொடுத்தோ, அல்லது வாங்கியது உண்டா என்றால், இல்லை. தாவா சொத்தின் மொத்த விஸ்தீரணம் பு.ஏ.7.50 ஆகும். தாவா சொத்தை வாதி கிரையம் பெற்ற ஆவணங்களை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால், இல்லை. தாவா சொத்து வாதிக்கு 169/1980 மற்றும் 2648/1999 என்ற இரண்டு கிரைய ஆவணத்தின் மூலம் பாத்தியப்பட்டது என்றால், எனக்கு தெரியாது. வாதிக்கு எப்போது, எதன் அடிப்படையில் தாவா சொத்து பாத்தியப்பட்டது என்ற விவரம் தெரியுமா என்றால், நான் வாதியிடம் பேசவில்லை. வாதியின் பொது அதிகார முகவர் தங்கராஜ் மூலமாகத்தான் கிரையம் வாங்கினேன். தாவா சொத்தைப் பற்றி எந்தவித விவரமும் தெரியாமல் கிரையம் வாங்கியுள்ளேன் என்றால், சரியல்ல. பொது அதிகாரம் மற்றும் வில்லங்கசான்றிதழ் பார்த்து கிரையம் பெற்றுள்ளேன். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் வில்லங்கச் சான்றிதழா என்றால், எனக்கு தெரியாது. நான் வில்லங்கம் பார்த்து தாவா சொத்தை கிரையம் பெற்றேனா என்றால், ஆமாம். என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணத்தில் 11–வது பதிவாக தங்கராஜ் முகவராக எனக்கு கிரையம் செய்து கொடுத்த பதிவு உள்ளதா என்றால், என்னிடம் காண்பிக்கப்படும் ஆவணம் பற்றி தெரியாது. ஆனால், பொது அதிகார முகவர் தங்கராஜிடம் இருந்து நான் கிரையம் பெற்றேன். வாதி கிரையம் பெற்ற தேதி 05.03.1980 முதல் நான் கிரையம் பெற்ற நாள் 21.06.2006 வரை தாவா சொத்தில் என்ன நடந்தது என்ற விவரம் தெரியுமா என்றால், தெரியாது. 20 ஆண்டுகளுக்கு முன்பாக தாவா சொத்தில் என்ன நடந்தது என்று எனக்கு தெரியாது. தாவா சொத்து எங்களது அனுபவத்தில்தான் உள்ளது. ஜீவனாம்ச செட்டில்மெண்ட் ஆவண எண்.170/1980 ஆவணத்தில் வாதி, அவரது தகப்பனாருக்கு பு.ஏ.1.00 விஸ்தீரணத்தை –சி– அயிட்டச் சொத்தாக எழுதிக் கொடுத்துள்ளார் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. வாதி 19.04.1984–ல்

283/1980 கிரைய ஆவணத்தின் படி தாவா சொத்தில் இருந்து பு.ஏ.4.00 விஸ்தீரணத்தை ராமாயி என்பவருக்கு விற்பனை செய்துள்ளார் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. வாதி விற்பனை செய்த சொத்தை 30.08.1999ம் தேதியன்று 2648/1999 ஆவணத்தின் மூலமாக மீண்டும் கிரையம் வாங்கியுள்ளார் என்றால், அதுபற்றி தெரியாது. 01.04.2003ல் நான் வாதியுடன் கிரைய உடன்படிக்கை ஆவண எண்.1100/2003-ன் மூலம் உடன்படிக்கை செய்துகொண்டேன் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.5- ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வா.சா.ஆ.5ல் நான் வாதிக்கு ஆவண எண்.169/1980 மற்றும் 2648/1999 கிரைய ஆவணங்களின் படி பாத்தியப்பட்டுள்ளது என்று கூறியுள்ளேன் என்றால், 20 ஆண்டுகளுக்கு முன்பு என்ன நடந்தது என எனக்கு ஞாபகம் இல்லை. மேற்படி சொத்தை நான் வாதியிடம் ரூ.1,50,000/-க்கு கிரையம் பேசி, அதில் முன்பணமாக ரூ.1,23,000/ கொடுத்ததாக கிரைய ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது என்றால், அது பொய்யானது. அவ்வளவு முன்தொகை கொடுக்கவில்லை. மேற்படி கிரைய உடன்படிக்கை 3 ஆண்டு காலக்கெடு கொடுக்கப்பட்டதா என்றால், 20 ஆண்டுகளுக்கு முன்பு என்ன நடந்தது என எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் வா.சா.ஆ.4 ஆவணத்தில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். வா.சா.ஆ.4-ல் 01.04.2003-ல் ஏற்பட்ட கிரைய ஒப்பந்ததை ரத்து செய்த ஆவணம் என்றால், 20 ஆண்டுகளுக்கு முன்பு ஏற்பட்ட ஆவணம் என்பதால், என்ன நடந்தது என எனக்கு ஞாபகம் இல்லை. வா.சா.ஆ.4 ஆவணத்தில் வாதிக்கு கொடுத்த முன்தொகையை பெற்றுக்கொண்டதாக குறிப்பிடவில்லை என்றால், அதுபற்றி தெரியாது. மேற்சொன்னவாறு சம்பவம் நடக்காததால்தான் நான் தெரியாது என்று பதில் அளிக்கிறன் என்றால், சரியல்ல. 20 ஆண்டுகளுக்கு மேல் ஆகிவிட்டதால், சரியாக என்ன நடந்தது என எனக்கு ஞாபகம் இல்லை. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.3 ஆவணம் நான் கிரையம் ஆவணம் என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.3-ல் தாவா சொத்தைப் பொறுத்து மூல ஆவணமாக 1980 தேதியிட்ட ஆவணம் காட்டப்பட்டுள்ளது என்றால், எனக்கு சரியாக தெரியவில்லை. ஆவணம் இதுதான். எனது கிரைய ஆவணத்தில், வாதியின் ஜீவனாம்ச செட்டில்மெண்ட் எண்.170/1980 மற்றும் 2648/1999 என்ற கிரைய ஆவணம் பற்றி குறிப்பிடவில்லை என்றால், எனக்கு தெரியாது. மேற்படி ஆவணங்களை குறிப்பிடப்பட்டிருந்தால், நான் பு.ஏ.2.50 மட்டுமே கிரையம் பெற முடியும் என்றால், சரியல்ல. வாதி என்னிடம் கடன் வாங்கியதற்காகதான் உடன்படிக்கை ஆவணம் ஏற்படுத்தப்பட்டது என்றால், சரியல்ல. நான் வாதிக்கு

கடன் கொடுக்கவில்லை. மேற்படி கிரைய பத்திரம், பொது அதிகார பத்திரம், கிரைய ஒப்பந்த பத்திரம் ஆகியவை பெயரளவில் ஆனது என்றாலும், அதில் உண்மைதன்மை இல்லை என்றாலும், சரியல்ல. மேற்படி ஆவணத்தின் தன்மை பற்றி வாதிக்கும் தெரியாது என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. கிரைய உடன்படிக்கை பத்திரம், ரத்து பத்திரம், பொது அதிகார ஆவணம் ஆகிய அனைத்தையும் பத்திர எழுத்தாளர் ஈ.ராமசாமி என்பவர்தான் எழுதியுள்ளார் என்றால், சரிதான். அவர் ஓய்வு பெற்ற சார்பதிவாளர் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. மேற்கண்ட ஆவணங்களில் ஒரே சாட்சிதான் அனைத்து ஆவணங்களிலும் சாட்சியாக கையொப்பம் செய்துள்ளார் என்றால், அதுபற்றி தெரியாது. நான் கிரையத் தொகையை செலுத்தாமல், பெயரளவில் தாவா சொத்தை கியைரம் பெற்றுள்ளேன் என்றால், சரியல்ல. நான் ரூ.82,600/−ம் பணம் செலுத்திதான் கிரையம் பெற்றேன். அதற்கான ஆவணத்தை தாக்கல் செய்யவில்லை என்றால், சரிதான். நான் கையில் கொடுத்தேன். இந்த வழக்கு 2013−ல் இருந்து நிலுவையில் உள்ளது. வழக்கு நிலுவையில் உள்ள போதுதான் நான் 3−ம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்தேன் என்றால், சரிதான். 3−ம் பிரதிவாதிக்கு வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. 3−ம் பிரதிவாதிக்கு மேற்படி வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரிந்துதான் கிரையம் வாங்கினார். இ.ம.எண்.9/2024−ன் படி தற்காலிக உறுத்துக்கட்டளை நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால், எனக்கு தெரியாது. என்னிடம் காண்பிக்கப்படும் பி.வா.சா.ஆ.9 பட்டா என்னால் தாக்கல் செய்யப்பட்டது என்றால், சரிதான். பி.வா.சா.ஆ.9 ஆவணத்தில் கடைசியாக 13.02.2026−ல் நடவடிக்கை எடுக்கப்பட்டதாக குறிப்புகள் உள்ளது என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. இடைக்கால உறுத்துக்கட்டளை நிலுவையில் உள்ளதை மறைத்து, நான் பி.வா.சா.ஆ.9 பட்டா பெறப்பட்டுள்ளது என்றால், சரியல்ல. பி.வா.சா.ஆ.9 ஆவணத்திற்கும், எனக்கும் எவ்வித தொடர்பும் இல்லை என்றால், அதுபற்றி எனக்கு தெரியாது. வாதி விவசாயம் செய்து வருகிறார் என்றால், எனக்கு அதுபற்றி தெரியாது. வாதிக்கு படிப்பறிவு இல்லை என்று எனக்கு தெரியாது. வாதிக்கு நான் கடன் கொடுத்து, வாதியிடம் இருந்து கிரைய உடன்படிக்கை பெற்றுள்ளேன் என்றால், உண்மையல்ல. வாதி குறிப்பிட்ட காலத்திற்குள் மேற்படி கடன் தொகையை திருப்பு செலுத்தவில்லை என்றால், உண்மையல்ல. அதனால், வாதியை வற்புறுத்தி 1−ம் பிரதிவாதி பெயருக்கு பொது அதிகார ஆவணம் எழுதவைத்தோம் என்றால், உண்மையல்ல. நானும், 1−ம் பிரதிவாதியும் வாதியுடன் இருந்த உறவை தவறாக பயன்படுத்தி, வாதியின் படிப்பறிவு இல்லை என்பதை தெரிந்து, அவருக்கு நெருக்கடி ஏற்படுத்தி, நேரம்

பார்த்து திட்டமிட்டு தாவா சொத்தை அபகரிக்க வேண்டி, ஆவணங்களை தயாரித்து, வாதிக்கு ஆவணங்களில் உள்ள விவரம் தெரியாமல், வாதியின் அறிவு இல்லாமல் தாவா சொத்தை அபகரித்துள்ளோம் என்றால், சரியல்ல. தாவா சொத்தின் சுவாதீனமும் என்னிடமும், 3–ம் பிரதிவாதியிடம் இல்லை என்றால், சரியல்ல. நானும், 3–ம் பிரதிவாதியும் நல்லெண்ணத்தில் கிரையம் பெறவில்லை என்றால், சரியல்ல. எனவே வாதியின் வழக்குப்படி தீர்ப்பாக வேண்டும் என்றாலும், சரியல்ல.

**மறுவிசாரணை இல்லை.**

Taken down by me in open Court read over and interpreted to the witness and acknowledged by him/her to be correct.

SELVAM SUSILA
Digitally signed by SELVAM SUSILA
Date: 2026.04.01 17:19:20 +0530

District Munsif